www.padippakam.com

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
# EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT



**2007 அக்டோபர் 20,21ந் திகதிகளில் பாரிசில் நடைபெறவுள்ள தலித் விடுதலை முன்னணியின் மாநாட்டிற்கு எமது உளமார்ந்த பேராதரவை தெரிவித்துக் கொள்கிறோம்.**

இனப்பிரச்சனைக்கு பல தசாப்த வரலாறு என்றால் இது பலநூறாண்டு வரலாறு. காலம் காலமாக தமிழ் சமூகத்தினுள் மக்களில் ஒருபகுதியினர் ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இந்த ஒடுக்குமுறையின் வரலாறு குரூரமானதும், ஈவிரக்கமற்றதுமாகும்.

வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களினூடாக சாதிரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்கள் ஒலித்துக்கொண்டுதான் இருந்தன. இப் போராட்டத்தில் வரலாறு முழுவதும் பல்லாயிரம் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். வறுமையினதும், தீண்டாமையினதும் குரூரத்தை அனுபவித்துக் கொண்டு சேற்றிலும், புழுதியிலும் உழல்பவர்களாக தலித் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய எமது நாட்டின் யுத்த சூழ்நிலையிலும் பெருமளவில் குறிப்பாக் பாதிக்கப்படுபவர்கள் உயிரிழப்புக்களை சந்திப்பவர்கள் சாதிரீதியாக ஒடுக்கப்பட்டவர்களும் வறுமைகோட்டின் கீழ் வாழும் மக்களாகவே இருக்கிறார்கள். புலம் பெயர்ந்து சென்ற பின்னரும்கூட புலம் பெயர்ந்த தளத்தில் சாதி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திற்கும், தீண்டாமைக்கு எதிரான போராட்டத்திற்குமிடையே பெரும் தடைமதில் சுவரை எழுப்ப முடியாது. பெண்கள் மீதான ஒடுக்குமுறை, பிரதேச ரீதியான ஒடுக்குமுறைகள், சக சமூகங்கள் மீதான அச்சுறுத்தல்கள் ஒடுக்குமுறைகள் என்பன ஒடுக்கப்பட்ட தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியினரால் மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் சமூகத்தின் பிரதான பிரச்சினைகள் யாவும் இரண்டாம் பட்சமானவை எனக் கருதுவது பத்தாம்

படிப்பகம்

www.padippakam.com

பாசிசத்துக எதிரான போராட்டம் இவற்றுக்கிடையே பெரும் தடைமதில் சுவரை எழுப்பிவிட முடியாது.

கடந்த நூற்றாண்டில் 60 களின் முற்பகுதியில் இருந்து 70 களின் முற்பகுதிவரை தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள் இலங்கையின் இடதுசாரி இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டன. தீண்டாமை ஒழிப்புவெகுஜன இயக்கம், சிறுபான்மை தமிழர்மகாசபை ஆகிய அமைப்புக்களின் பங்களிப்புக்கள் இங்கு குறித்துரைக்கப்படவேண்டியன.அவை சமூகத்தில் குறிப்பிடத்தகுந்தளவு தாக்கத்தைச் செலுத்தின. ஆனால் சாதி அமைப்பு தகர்ந்து விடவில்லை. 1980 களின் முற்பகுதியல் இருந்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கிராமிய தொழிற்சங்க உழைப்பாளர் அமைப்புக்களுடன் இணைந்து யாழ் செம்மண் பிரதேசம், வடமராட்சி, தென்மராட்சி பிரதேசம் தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்ச்சியையும் போராட்டங்களையும் முன்னெடுத்தது. ஈழமக்கள் புரட்சிகரவிடுதலைமுன்னணியின் கணிசமான தோழர்கள் சாதிரீதியான பின்புலத்திலிருந்தும் வறிய குடும்பங்களின பின்புலங்களிலிருந்தும் வந்தவர்களே.

இன்றும் சாதி ஒடுக்குமுறை அதன் குரூரங்களுடன் கட்டிக்காக்கப்படுகிறது. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக தொடர்ச்சியான இடையறாத சுயாதீன விழிப்புணர்ச்சி இயக்கம் அவசியம் . அந்த வகையில் பாரிஸ் மாநாடு எமக்கு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட. எமது சமூகத்தின் ஆதிக்கக் கருத்தியலால் ,நடைமுறையால் அலட்சியம் செய்யப்படும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சமூகப்பிரச்சனையை மையமாகவைத்து புலம் பெயர்தளத்தில் நடைபெறும் இம்மாநாடு வெற்றி பெற எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

தி. ஸ்ரீதரன்
பொதுச் செயலாளர்
ஈ.பி.ஆர்.எல்.எப்-

படிப்பகம்